உ 69

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி ௫ } பிரமாதீச௵ ஆனி௴ { பகுதி ௩

கவிகளும் கவிஞர்களும்.

அமிழ்தினு மினிய தமிழ் மொழியகத்து எழுத்து அசை சீர் தளை அடி தொடை எதுகை மோனை முதலிய பலவுறுப்புக்களையுடைய கவிகள், வெண்பா முதலிய நான்குவகையினவாகி, அவற்றிலொவ்வொன்றும் பலவகைத்தாகி, ஒருவித ஓசைக்கட்டுப்பாடு பெற்று நிகழும். அங்ஙனம் தோன்றும் கவி; செய்யுள், பா, பாட்டு தூக்கு முதலிய பல பெயர்களைக் கொண்டதாகும். இயற்கையறிவும், நூலறிவும் பெற்ற புலவர்கள் தங்கள் மனத்திற்றோன்றிய அரிய பெரிய விஷயங்களை உலகங்கண்டு களிக்குமாறும், பின்பற்றியுய்யுமாறும் கவிகளாகச் செய்து வைத்துள்ளார். வசனமாக எழுதிவைப்பின் அது பிறர் மனத்தைக் கவரும் ஆற்றல்மிகக்கொள்ளாதென்பது கருதியே மனத்தைக் கவரத்தக்க இனிமை வாய்ந்த ஓசைச்சுவையுடன் சொற்சுவை பொருட்சுவைகளு மமையும் வண்ணம் கவிகளாக்கி வைத்தனர்.

பலவகைத் தாதுக்களா லமைந்த நமதுடல் உயிர்க்கிடனாதல் போல, பலவகைச் சொற்களாலமைந்தகவி பொருட்கிடனாகி விளங்கும். ஆகவே பொருட்சுவையற்ற கவியானது உயிரில்லாத உடலை (பிணத்தை) யொப்பதல்லது சிறவாது. இதனாற்றான்.

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

என்றார். அன்றியும், மலரவன் செய்யும் உடல் மாய்தல்போல புலவர்கள் செய்யும் உடல் (கவி) மாயாமல் என்றென்றும் நிலைபேறுடையதாகும். கவிஞர்கள் தாம் குறித்தபொருள் முழுதும் நன்கு வெளிப்படுமாறு செய்வதே கவியெனப்படும். அல்லாதன கவியாகா.

"எழுத்து முதலா வீண்டிய வடிவில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்"

என்பதனானே இதனை யறியலாம்.

குறித்த பொருள் நன்கு தோன்றலாவது:—ஒரு கவியின்பொருள் வீரம், சோகம், உவகை, நகை முதலியவற்றுள் யாதானுமொன்றைப்பற்றியதாயின் அக்கவியைக் கேட்டுப் பொருளறிந்தவுடன் கேட்டார்க்கு அவ்வகையில் மெய்ப்பாடு தோன்றலேயாம். உத்தமப் புலவர்கள் செய்த நூல்களிலிருந்து சோக ரசமுள்ள கவிகளைக் கேட்டறிந்தவுடன் கண்ணீர்விட்டு மனங்குழைதலும்; வீரம், உவகை, நகை முதலியவும் அவ்வாறே கேட்பார்க்கு மெய்ப்பாடுநன்கு தோன்றுதலும் பலரிடம் நேரில் காண்கின்றோம். பெரிய புராண முதலியவற்றிலுள்ள பத்திச் சுவைப் பாடல்களைக் கேட்டபோது கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள் தொடுமணற் கேணியிற்சுரந்து நீர்பாய நிற்பவரை யாண்டுங் காண்கின்றேம். இதனை "பத்திச் சுவைநனி சொட்டச்சொட்டப் பாடிய் கவிவலவ" என்று ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் கூறும் வாக்கானும் அறியலாம். இத்தகையதோற்றந்தான் குறித்த பொருள் நன்கு தோன்றலென்பதாம்.

நாவிற்புக்க நல்லுணவானது அதற்கு இனிமையும் உடற்குப் பலமுந் தருவதுபோல, காதிற்புக்க நற்கவியும் அதற்கு இன்பமும், மனத்திற்கு வலிமையும் தரவேண்டும். பரிசனவேதி இரும்பின் இயற்கையியல்பைமாற்றி மாற்றுயர்ந்தபசும்பொன்னாக்குதல்போல,

நற்கவியும், மனத்தின் இயற்கையாகிப் பொறிவழிச் செல்லும் புல்லொழுக்கைமாற்றி ஆன்றோர்கொண்ட நல்லொழுக்கத்தைச் சேர்க்க வேண்டும். காட்சிப் பொருள்கள் யாவும் பிரதிபலிக்கும் கண்ணாடி போல, மனக்கண்ணாற் காணும் உலகிய லொழுக்கங்க ளனைத்தும் பிரதிபலிக்கும் பெற்றிவாய்ந்து நிற்பதே கவியாம். கவிதா சக்தியும் நூலறிவும் வாய்ந்தவர்களிடம் உள்ளடங்காமகிழ்ச்சியாலும், கொதிப்பாலும், பிறவற்றாலும் கவி தானாகவே வெளிப்படும். இங்ஙனம் வெளிப்படுவதே கவிதா சக்தியாம். இந்த சக்தியானது ஒருவனுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கவேண்டும். அங்ஙனம் அமையப் பெற்றவனே சிறந்த கவிஞனாவான். அவன் கவியே உலகைத் தன் வசப்படுத்தி மகிழ்விக்கும். இயற்கையமைப்பாகிய கவிதா சக்தி யில்லாதவர் காரிகை முதலிய நூல்களைப் படித்து அந்நூல்களிற் கூறப்பட்ட விதிகளைப் பொருத்தி முயன்று கவிபாடுவாராயின் அக்கவி இலக்கணவிதி வழுவாததாகு மல்லது, மெய்ப்பாடு தோன்றச் செய்து உலகைத் தன் வசமாக்கும் சிறப்பைப் பெறுதென்பதும் ஆகவே யுலகத்தார் மதியாரென்பதும் துணிபாம்.

கவிதா சக்தி நிரம்பப் பெற்றவர்கள் காரிகைமுதலிய நூல்களை முறையாகக் கல்லாதவராயினும் அவர் கூறுங் கவிகள் இலக்கண விதிக்கு மாறுபடாவண்ணம் சீர்தளை எதுகை மோனை முதலிய எல்லா நலங்களும் தாமாகவே அமையப் பெறும். கவிதா சக்தி யியற்கையிற் பெறாதவர் இலக்கண நூல்களைப் படித்துச் செய்யுள் விதி தெரிந்து அதன்படி கவிபாடத் தொடங்கி ஒரு சொல்லோடு பிறிதொரு சொல்லைச் சேர்க்குந் தோறும் இலக்கண விதியைப் புணர்த்திப் பார்த்துப் பாடலை முடிக்குமுன் அவர் படும்பாடு பிரசவ வேதனையினும் பெரிதாகும். இத்துயரை ஒரு புலவர் பின் வருமாறு கூறுவாராயினர். அது:-

"அடிக்குமின்சொற் சுவைக்குமுன்னோர் விதிக்குமொரு குறைவுவரா தமைத்தோர் பாடல், முடிக்குமுனந் தய்கொடுத்த சேனையெலாம் வாங்குதையோ" என்பதே. "காரிகைகற்றுக் கவிசொலு முன்னே, பேரிகை தட்டிப் பிழைப்பது நன்று" என்பதும் இக்கருத்தையே யுடையதாகும். இயற்கையாகிய கவிதா சக்தி மூதற்

கருவியும், இலக்கிய இலக்கண வுணர்ச்சி துணைக் கருவியுமாகு மென்று கொள்ளவேண்டும்.

தற்காலத்தும் இலக்கியஇலக்கண வல்லுநரான சிலபண்டிதர்கள் கவிபாடுந்திறம் பெருமையும், அவற்றின் படிப்புநிரப்பாத சிலர் கவி பாடுந் திறமை மிகப் பெற்றிருத்தலும் பிரத்தியட்சமேயாம். ஆக வே எத்தனை நூல்களை எழுத் தெண்ணிக் கற்பினும் கவிதாசக்தியி யற்கையிற் பெற்றாலன்றி நற்கவி பாடும் நற்கவிஞராகா ரென்பது எவ ரும் ஒப்பமுடிந்த தொன்றும். நூலுணர்ச்சியும் கவிதா சக்தியும் வாய்ந்தவரே உத்தம கவிஞர்களாவார்.

கவிதா வனிதா என்பது உலக வழக்கு. வனிதை மனமொ த்து வந்து கூடினல் மட்டும் இன்பஞ் சனிக்குமல்லது பலவந்தஞ் செய்துகூடப் பெறில் இன்பம் தோன்றாது. அங்ஙனம் கூடுதலை உலகமும் கொள்ளாது. அதுபோன்று கவிதையும் மனவெழுச்சி யால் தானகவே வந்தால் மட்டும் இன்பந்தருமல்லது எழுத்தையும் சொல்லையும் எண்ணி யிணைத்து வலிந்து கட்டுப்படுத்திப் பாடப் படின் அது சுவைபயவாது. உலகமும் அதனை மதியாது. இத்த கைய அதம கவிகளைப் பற்றிக் கம்பநாடர் கூறுவதாவது, 'பொன் விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப் புன்கவியெனத் தேளிவின்றி'' என்பதாம். உத்தம கவியைப்பற்றி அவர் கூறுவதாவது.

''புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் றாகி
யவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர்கண்டார்'' என்பதே.

இக்கவியில் சான்றோர் கவிக்குக் கூறும் பொருளைமட்டும் அடி யில் காட்டுவாம்.

சான்றோர் கவிக்குச்சிலேடைப் பொருள் வருமாறு:—புவியினுக்கு அணியாய்-புவியிலுள்ளவர்களுக்கு அலங்காரமாகி, ஆன்றபொருள் தந்து - அமைந்த சதுர்வித புருஷார்த்தங்களையளித்து, புலத்திற்றாகி - அறிவின தாகி, அவி அகத்துறைகள் தாங்கி - தேவருணவினையொத்த அகப்பொரு ட்டுறைகளைக் கொண்டு, ஐந்திணை நெறி அளாவி - ஐவகை நிலத்தின் மார்

க்கத்திணைக்கலந்து, சவி உற தெளிந்து - (மனம்) ஒளிபெறத் தெளிந்து, தண் என்று - தண்ணளிபூண்டு, ஒழுக்கமும் தழுவி - அவ்வவ்வருண நிலைகட்கேற்ற ஒழுக்கமுந் தழுவி என்பதாம்.

புவி: ஈண்டு ஆகுபெயராய் மக்களை யுணர்த்திற்று. அணி என்றது ஐவகையிலக்கணத்து ளொன்றாகிய அணி என்பதனை; இனி, சான்றோர்கவியை மேற்கோளாக எடுத்துரைப்பார் சொற்கழகாய் என்றலுமாம்; அணி - அழகு; "நூற்கியைந்த சொல்லின் வனப்பே வனப்பு" என்றார் ஆன்றோரும். 'ஆன்ற' ஈண்டு அமைந்த என்னும் பொருட்டு. "ஆன்ற பெரியாரகத்து" என நாயனாரும், "மரங்கள் - ஆன்ற பருவத்தாற் பூத்து" என இந்நூலாசிரியரும் அமைந்த என்னும் பொருளிலுரைத்தமையறிக. ஆன்றபொருள் - சதுர்வித புருஷார்த்தம். "அறம்பொருளின்பம் வீடெனநான்கும் - திறம்படு பொருளெனச் செப்பினர் புலவர்" என்பவாகலின், சான்றோர் தாம் கற்றுங்கேட்டும் பெற்ற பல அரியபெரிய விஷயங்களும் கற்பித்த கற்பனைகளும் அக்கவியின்கணடங்கி ஆக்கியோர் பேராற்றலைக் குறிக்குமென்பார் 'புலத்திற்றாகி' என்றார். நூல்வழிப்பட்டதெனினு மமையும். புலம் நூலாதலை, "புலம் தொகுத்தோன்" என்னும் தொல்காப்பியப் பாயிரத்தாற் கண்டுதெளிக. அகப்பொருட்டுறைகள் இன்பப் பாலனவாகலின் அகத்துறைகட்குத் தேவருணவாகிய அமிர்தத்தை யுவமை கூறினார். ஐவகைத் திணைகளும் திணை மயக்கங்களும் விரவி நடத்தலின் 'ஐந்திணை நெறியளாவி' என்றார். கற்போர் தாம் மடமைநீங்கி அறிவாமொளியைப் பெறுதற்கு அக்கவியே காரணமாகவிருத்தலின் 'சவியுற' என்றார். தெளிவு குன்றக்கூறன் முதலிய குற்றங்களி னீங்கிய தன்மை. இனி, 'ஐந்திணை' என்பதற்கு ஐந்தின் இணையாகிய பத்து எனக்கொண்டு சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய பத்துவிதத்திற் கலந்து அழகுபொருந்தத் தெளிவடைந்து என்றலுமாம். உலகம் இருள்தருமாஞாலத்து வழிதெரியாது உழன்று பின் எரிவாய் நரகிற்கிரையாகாமே நன்னெறிச்செலுத்தி முத்தியையளிக்குந் தண்ணளி பூண்டுள்ளதாதலின் 'தண்ணென்று' என்றார். தண்மை - தண்ணளியென்றார் பரிமேலழகியாரும். நான்கு வருணத்தாரும் தத்தம்வருணத்திற் பிறழாது நிலைபெறப் பாதுகாத்தல் அறநிலை அறமாகலின் இன்றியமையாத அவ்வறத்தையும் விளக்கிக்காட்டுவதென்பார் 'ஒழுக்கமுந் தழுவி' என்றார். "வருணக் காப்பிற் பிறழா நெறிநிலை - பெறுதற் குரித்தாய்ப் பேணும்பெற்றி - அறநிலை யறமென் றறைந்தனர் புலவர்." இது பிங்கலத்தை 'கிடந்த என்ற சொல்லாற்றலான் ஆக்கியோர் பூதவுடம்பு பொன்றினும் புகழுடம்பு பொன்றாது நிலைத்திருக்குமென்பது விளங்குதலறிக.

இன்னும் இக்கம்பநாடர் கவிதாசக்தி நிரம்பிய அரும்பெரும் புலவர்திலகராதலால் "பாவருங் கிழமைத் தொன்மைப் பருணிதர் பணித்த பத்தி, நாவருங் கிளவிச் செல்வி நடையள்" என மற்றோரிடத்தும், "கவிஞர் நாட்டிய, சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது" எனப்பிரிதோரிடத்துங் கூறுவாராயினர்.

இத்தகைய உத்தமக் கவிஞர்திலக ரியற்றிய நற்கவிகளானே உலகத்தில் சகல தருமங்களும் நிலைபெற்றுள்ளனவாகும். செஞ்சொற் செறிவும், இனிய வோசைப் பொலிவும், உலகமொப்பத் தக்க செம்பொருள் நிறைவும் கொண்டுள்ள கவிகள் பிறர் மனத்தைக் கவரும் சக்தி பெற்றிருத்தலாற்றான் அவற்றை மனப்பாடஞ் செய்வது சுலபமாகின்றது. மனப்பாடஞ் செய்தலில் வருத்தத்தை யுண்டாக்கும் கவி எதுவாயினும் அது கவிதாசக்தியிற்றோன்றியதில்லை யென்பது நிச்சயம். நிகண்டு முதலிய நூல்களிலுள்ள கவிகளை மனப்பாடஞ் செய்யுங்கால் அக்கவிகள் மனத்திற் றங்குவதில்லை. மிகவருந்திப்பன்முறைபடித்து நாத்தழும்பு படுமாறுபயின்று மனங்கொள்ள நேரிடுகிறது. இதன் காரணம் யாதெனில் அக்கவிகளில் கவிதாசக்தி அமைவதற்கிடமில்லாமையேயாம். பெரிய புராணம் திருவிளையாடற் புராணம் கம்பராமாயணமாதியவற்றிலுள்ள கவிகளையும் மற்றும் பல தனிக்கவிகளையும் மனப்பாடம் செய்யத்தொடங்கினால் வெகு சுலபத்தில் பாடமாகின்றமைக்குக் காரணம் அவை கவிதா சக்தி மிகுதியாலியற்றப்பட்டமையேயாம். இதனாற்றான் பண்டு தோன்றியனவும் இன்று தோன்றுகின்றனவுமான நூல்கள் தனிக்கவிகளில் ஒருசில யாவராலும் பாராட்டப்பெறுதலும், ஒரு சில அங்ஙனம் பாராட்டப்படாது அபிமானம் வைத்த சிலரால் மட்டும் பாதுகாக்கப்படுதலும் பெற்றுள்ளமை தெளியத்தகும். இக்கவிதா சக்தியானது முற்பிறப்பிற் செய்த நல்வினைக்கேற்ப இறைவன் கூட்டுவித்தாலல்லது சிரமப்பட்டு முயன்று தேடிக்கொள்ளக் கூடியதன்று. இவ்வுண்மையை யுணராமல் "செஞ்சொலை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்" என்றவாறு மனம் புண்படச் சிந்தனை செய்து ஓலைப்பாய் முடைவது போலச் சொற்களைச் சேர்த்துக் கவிமுடைவாரை யின்றுங் காணலாம். இவ்வாறு முடைந்து தோற்றுவித்ததுங் கவியெ

னப் பெய்ருறுமேனும், அதனை யியற்றினோர் தாம் கொண்ட சிரம வசத்தராகி, குரூபியான மகனைநோக்கி யீன்றாள் மகிழ்வது போல் தம்முடையதென்ற அபிமானத்தால் மகிழ்தல் கூடும். உலகத்தார் கண்டு களித்தல் சாலாது. "எல்லார்க்கு மொவ்வொன்றெளிது" என்பவாகலின் கவிதா சக்தியுடையார்க்கே கவி பாடுதல் எளிதாம். ஏனையர் இவ்வுண்மை யுணராது கவி பாடப்புகுதல் வீணும். கவிபாடப் புகுவோர் தமக்கு அச் சக்தி யுண்டா என்பதை யாராய்ந்த பின்னரே பாடவேண்டும். பாடுவிப்போரும் அச் சக்தியுடையாரைக் கொண்டேபாடச் செய்யவேண்டும். அன்றேல் இருவர் செயலும் அவமாம். "செய்வினை திருந்தச் செய்" என்பதைக் கவிபாடுவோரும் "இதனை இதனு லிவன்முடிக்கு மென்றாய்ந், ததனை யவன்கண் விடல்" என்பதைப் பாடுவிப்போரும் சிந்திக்கக் கடவர்.

தற்காலத்தில் "...தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே" என்றவாறு சற்றே இலக்கிய இலக்கணங் கற்றவரும் கல்லாதவரும் தமது சக்தியையறியாது ஆசையாலும் பொறாமையாலும் தூண்டப்பட்டுத்தனிக்கவிகள் சிறுநூல்கள் காவியங்கள் ஆகியவற்றைப் பாடப்புகுகின்றனர். வாழ்த்துக் கவிகளும் சரமகவிகளும் எத்தனை எத்தனை தோன்றுகின்றன? இருளிலாமதியும், அருளிலா அறமும், பொருளிலாக் கவியும் ஒரு நிகரனவேயாம். இருளுறுமதியும் அருளுறு அறமும்போலப் பொருளுறு கவியே கவியாகும். அதனைப் பாடுவோரே கவிஞராவார்

பத்திராதிபர்,

"கற்பு"

(48-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறன்புடன் விசுவசித்தொழுகிய மனைவியிறந்து போன காலத்தில் வள்ளுவரே தம் வாயால்

அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் றவறுத பாவா—யடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூந்த பேதையே போதியோ
என்றூங்கு மென்கணிரா—எனக்கூறி வருந்தியுள்ளாரெனின்

அவ்வம்மையின் கற்புத்திறன் நம்போன்றூராற் கூறற்பாற்றே.

மேலும், சீதை, தமயந்தி, சாவித்திரி, திரௌபதை, வீரதிபன்மனைவியார் முதலியவர்களின் கற்பின் சிறப்பையும், தம்மாருயிர்க் கணவருயிர் நீங்கக் கேட்டதுமே தம்முயிரையுந் திரணமாக மதித்து தீவாய்ப்பாய்ந்து நீத்துத் தங் கற்பை நிலை நிறுத்திய பூதப்பாண்டியன் றேவி பெருங்கோப் பெண்டு, கோவலன் மனைவி கண்ணகி முதலியவர்களின் உண்மைக் காதலையு முணராதார் யாவர்? அக்காலத்தில் ஸ்திரீ புருடர் உடலுமுயிரும் போன் றன்னியோன்னியமாய் வாழ்ந்துள்ளவர்களென்பது உயிர் நீங்கிய வுடல் சுட்டெரிக்கப் படுவதொப்ப ஸ்திரீகளுந் தங்கள் கணவனுகிய உயிர் நீங்கிய காலத்தே தங்களுடம்பையு மக்கினிவாய்ப்படுத் தழித்தாரென்க. இவ்வழக்கம் பின்னர்க் கொடூரமாகவும் நிர்ப்பந்தமாகவுஞ் செய்யப் பட்டமையாற் காருணிய பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார் காலத்தில் (Sati) சககமனம் என்று சொல்லப்படுகிற மேற்கூறிய வழக்கம் நிறுத்தப்பட்டதென்க.

தற்காலத்திலு மாங்காங்கு கற்புடைய ஸ்திரீகளினி னருமையுஞ் சிறப்பும் விளங்காமலில்லை.

அன்பர்காள்!

இதுகாறுங் கூறியவாற்றான் ஸ்திரீ புருடர்களொற்றுமையுட னன்பாய் வாழ்வ தவசியமென்பதும், ஸ்திரீகள் தங்கள் கணவரிறப்பின் நன்னெறியினின்று கடவுளைப்போற்றி முத்தியடைய முயலவேண்டுமென்பதும், பெற்றோர்கள் தம் மக்கட்கு மதபோதனையோடுகூடிய கல்வியை யளித்து நல்ல வரன்றேடிக் கொடுத்துத் தம் பெண்மக்கள் கற்பிற் சிறந்த கண்மணிகளாக விளங்கச் செய்யவேண்டுமென்பதுங் கருதப்படவேண்டும்.

யானிதுவரை கூறியவற்றைப் பொறுமையுடன் கேட்டுக்கனப்படுத்தியசபையோர்களுக்கென தன்பார்ந்த வெண்ணிறந்த வந்தனம்.

பி. சிதம்பர புன்னைவனநாதன்.

ஜாதிவித்தியாசத்தடைவிடை.

உண்மைச்சைவர் என்று கையொப்பமிட்ட ஒருவர் "போலிச் சைவரும் ஜாதி வித்தியாசமும்" எனத் தலைப்பெயரிட்டு வைசியமித்திரன் புஸ்தகம் 2. இலக்கம் 1முதல் 4வரை பொறித்துள்ளவற்றைக் கண்டனம். இன்ன பத்திரிகையில் இன்னாரெழுதிய இன்ன விஷயத்துக்கு மறுப்பு என்று எழுதாமைக்குக் காரணம் யாதோ? எழுதும் முறைகடந்து எழுதிய குற்றத்தாலுண்டாந் தண்டனைக்குத் தப்பி பிழைக்கவெண்ணிப் போலும்.

மிகப்பிரயாசையுடன் சைவப்பற்றுடையார் போன்று நடித்துக் காட்டி விரிவாயெழுதியுள்ள இவரது போலி வியாசத்தில் முதலாவது பத்தியில் "ஜாதிவித்தியாசம் பழைய காலந்தொட்டே வேதமுதலான நூல்களிற் காணப்படுகின்றதாதலின் அந்நூல்களை பிரமாணமாகக் கொண்டவர்கள் அவ்வித்தியாசத்தை அநுசரித்து ஒழுகுதலே செயற்பாலதென்கின்றோம்." என்று கூறி அடுத்து "அதனைத் தழுவி யொழுகல் வேண்டுமென்பது பகுத்தறிவில்லார் கூற்றாம்" என்கின்றார். இதனால் வேத முதலிய நூல்களைப் பிரமாணமாகக்கொள்ளாதவரே பகுத்தறிவுடையாரென்னும் இவர் கருத்து வெளியாயிற்று. இவர்தான் உண்மைச்சைவர் போலும்! "வேத வேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லி" எனவும் "மறைவழக்கமில்லாத மாபாவிகள்" எனவும் அருளிய திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்குக்களுக்கு என் கடவர்?

"நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண் ணியத்தா னாகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய் சாதியினில் வந்து
பரசமயங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொணாதே" என்னும்

அருணந்திதேவ நாயனார் திருவாக்கும், ("ஆதலிற் சாதி விசேடம் வேண்டப்படும்") என்னும் சித்தியார் உரையாசிரியர் வாக்கியமும் அறிந்திலர்.

"தொன்மையவாம் எனுமெவையும் நன்றாகா இன்று தோன்றிய நூலெனுமெவையும் தீதாகா" என்னும் சிவப்பிரகாசத் திருவாக்கைக் காட்டி, பழைய வேத முதலியவற்றைத் தள்ளிவிடும்படி

யும், இவருடைய வாக்கியத்தைப் பின் பற்றும்படியும் உபதேசிக்கின்றார். "பலகலையாகம வேதம் பாவையினுங் கருத்துப் பதிபசு பாசந் தெரித்தல்" என்னுமந் நூலாசிரியர் திருவாக்கை யறியார் போலும். அறிவரேல் புண்ணியத்தை வளர்த்தலினும் பாவத்தை தேய்த்தலினும் விரோதமில்லாதிருப்பின் பழையன கழித்தலும் புதியன கோடலுமாகு மென்றெழுதியிருப்பர்.

"வேதத்தில் ஜாதி வித்தியாசங் காணப்படவில்லை." என்றும் "உபநிடதங்களில் பிராமணர், ராஜந்யர் என்னுமிரண்டு பிரிவு மாத்திரம் காணப்படுகின்றது" என்றுங் கூறுகின்றார்.

"ப்ராம ணோஸ்யமுகமாஸீத்
பாகூராஜந்யக்ருதஹா
ஊருததஸ்யயத்வைச்யஹா
பத்பியாகும்சூத்ரோஅஜாயதா" என்று

தைத்ரியோபநிஷத் கூறுகின்றதே. அன்றியும்,

"விப்ரக்ஷத்திரியவிட்சூத்ரா
தீக்ஷார்ச்சப்ரவேசகா
ஆத்மார்த்தயஜனம்குர்யாத்
நக்குரியாச்சபாரார்த்தகம்." என்று

காரணாகமம் நித்தியார்ச்சனப் படலங் கூறுகின்றதே. வேதம் உபநிடதம் என்ற வாக்கியங்களைப் பிரயோகிப்பதாலேயே இவர் அவற்றை அறிந்தவரெனப் பிறர் எண்ணுவாரென்று கருதியது வியப்பினும் வியப்பே.

உயர்ந்த ஜாதியாரும் தாழ்ந்த ஜாதியாரும் கலந்து பிள்ளைகளைப் பெற்றும் உணவருந்தியும் வர்தார்களென்று பிரமாணங் காட்டுகின்றார். எதற்காக அவர்கள் அவ்வாறு செய்தார்கள் என்பதைக் கவனித்தாரா? அன்றியும் அச்சரிதங்கள் இன்றும் உள்ளவாறு வழங்கிவருகின்றனவே. அவ்வாறு இக்காலத்து உள்ளது சொல்வாரில்லையே. வேடத்தால் குலத்தை மறைக்கின்றனரே. இவரது பிறப்பிடை யுணர்ந்தவர்கள் தாமுண்ணுமிடத்துக்கு வரக்கூடா தென்றால் "நான் படித்தவனல்லவா? பிரசங்கியல்லவா? என் பாட்டன் பரம்பரைச் சைவவேளா

ளன் 'அல்லவா? என்னைத் தாம் உண்ணு மிடத்துக்கு வரக்கூடா தென்று எவ்வாறு சொல்லலாம்? சொன்ன இவரன்றோ போலிச் சைவர்? அறிவுடையவர்கட்குச் சாதிபேதம்ஏது? கண்பார்வையால் என்ன தோஷம்வரும்? ஒதுக்கிவைத்து உணவளிப்பது அவமான ப்படுத்துவதன்றோ?" என்று மிக்க கோபாவேசத்தோடுகூறிச் சண் டைக்குவருகின்றனரே. எவ்வளவுதான் கற்றவராயினும் பொய்வழி யிற் றம்மைப்புயர்த்தக்கருதுபவர் அவ்வளவுக்கவ்வளவுபிறரால் தாழ் த்தப்படுதல் நிச்சயமென்பதை யறியாதாருண்டோ? பொய்மொழி கூறித்தம் குலத்தை யுயர்த்தவருதலால் இவர்நினைப்பின்படி முடி யாதது மட்டுமன்று, இவரது கல்வியொழுக்கமாதியவற்றால் வரற் பாலதாகிய வுயர்வையும் இழநதவராவது திண்ணம். அறிவுடைமை க்கு ஏற்பட்ட வுயர்வுயாவர்கரும் எக்காலத்தும் உரியதொன்றே. அவரவர்க்குரிய அறிவுடைமைக்குத்தக்கவாறு அவரவர் யாண்டும் மதிக்கப்படுவர். அம்மதிப்புவேறு. ஜாதிபற்றிய மதிப்புவேறு. அறிவுடையர் அதனால் வரும் மதிப்பைக கொண்டு மகிழ்ந்து வாழ் தல்மட்டிலமையாது தமது ஜாதியையும் உயர்த்தி மதிப்படைய வேண்டுமென்று அவாவுவராயின் அவர் அறிவிலும் சிறியராகவே கருதப்பட்டுத் தாழ்வடைவர். தற்காலத்திலோ சிறிது காவிக்கல் லும் விபூதிருத்திராக்ஷமுமே ஜாதியையுயர்த்தப் போதுமான கரு விகளெனக்கொண்டு வெளிவேடங் காட்டுபவர் பலராகின்றனர். இத் தகைய கள்ளவேடதாரிகள் இவர்க்கு மெய்ச்சைவராகத்தோன்று வர் போலும். ஆகவே மெய்ச்சைவர் போலிச்சைவராகத் தோன்று வது சகசந்தானே, இங்ஙனம் முறை பிறழ்ந்து தோன்றுவது ஆராய் ச்சிக்குறையே யன்றி வேறில்லை. சூரியன் மஞ்சள் நிறமாகத்தோன் றல் கண்ணின் குற்றமல்லது வேறின்மையுணர்க.

"பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்றும், "ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" என்றும் "மேலிருந்து மேலல்லார் மேல ல்லர் கீழிருந்துங் கீழல்லார் கீழல்லவர்" என்றுங்கூறியுள்ள திருக் குறள்களை எடுத்துக்காட்டி பிறப்பினாற் ஜாதியில்லை ஒழுக்கத்தினால் மட்டுந்தான் ஜாதி யென்று முழக்குகின்றார். பிறப்பொக்கும் என் றது "வினை வயத்தால்வந்த பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப்

பொருந்தி நின்று அதன் பயன் அநுபவித்தல் எல்லா வருணத்தா ருக்கும் ஒத்தலில்" என்றும், சிறப்பொவ்வா என்றது "பெருமை சிறுமைகட்குக் கட்டளைக் கல்லாகிய தொழிற் பாகுபாடுகள் வருணந் தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலில்" என்றும் கூறிய பரிமே லழகருரையையும் "இழிந்த பிறப்பாய் விடு" மென்ற தேவர் திரு வாக்கையுங் கவனித்திருப்பாராயின் அவற்றை மேற்கோளாக எடுத் துக்காட்டி யிருக்கமாட்டார். இங்ஙனம் தம் சித்தாந்தத்துக்கு இண ங்காதவற்றைச் சொல்லி அவசித்தாந்தஞ் சாதிக்கும் தோல்வித்தான த்திற்குரியவரான இவர் பெருங் கல்வி பிறர்க்கில்லை என்றுகூறி மகி ழ்ந்தது நன்று! நன்று!! இவருடைய பெருங்கல்வித்திறத்தை அறி வுடையார் அறியாது போகார்.

பரிமேலழகர் நான்கு வருணத்திலும் உயர்ந்த குலமும் தாழ் ந்த குலமும் உண்டென்று கூறியது ஒவ்வொரு வருணத்திலும் பல உட்பிரிவுகள் உண்டென்பதை விளக்கவேஎன்பதையும், ''இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" என்ற ஆசிரியர் "ஒழுக்கமுடைமை குடி மை" என்றதனுல் குடிமை என்றது உயர்ந்த பிறப்பென்று விளக் கிக் காட்டினுர் என்பதையும் அறியாது மயங்குகின்றுர்.

இவர் கருத்தின்படி ஆதியில் ஜாதி வித்தியாசமே இல்லாதிரு ந்து பின்னர் ஏற்பட்டதென்றே வைத்துக்கொள்ளினும் அங்ஙனம் ஏற்பட்டது தவருகுமா? ஆகுமென்றும் அவ்வித்தியாசத்தைத் தள் ளிவிட வேண்டுமென்றும் இவர் கூறுவது எதுபோலுமென்னின், அறியாச் சிசுப்பருவத்தில் மலத்தைப் புசித்த குழந்தை அறிவுடைய யௌவன மூப்புப்பருவத்தில் மலத்தைத் தின்னுது விட்டது முறை யன்றெனக் கூறுவது போலும்·

பிறப்பினுலும் ஒழுக்கத்தினுலும் ஜாதி உண்டென்று கூறிய சாத்திரங்கட்கு முரண்படாது பொருள் கொள்ளுமிடத்து பிறப்பி னுள்ள ஜாதிக்குரிய சிறப்பு உரிமைகளை ஒழுக்கத்தினுள்ள ஜாதி அநுசரிக்கக் கூடாதென்றும், பொது உரிமைகளை அநுசரிக்க லாமென்றும் இனிது விளங்கும். உதாரணமாக:—பிறப்பினுல் பிரா மணனுயுள்ள ஒருவனுக்குரிய சிறப்புரிமை-ஆலயத்துள் அர்த்தமண் டபம்வரை போதல் அவனுக்குரிய பொது உரிமை-தன்னையுந் தலை வனையு மறியும்படியான நூலாராய்ச்சி செய்தலும் நிட்டை புரிதலு மாம்.பிறப்பினுல்சூத்திரனுயுள்ளவன்ஒழுக்கத்தினுல்பிராமணனேடு

ஒப்பானுபினும் பிராமணனுக்குரிய பொது உரிமையாகிய நூலாரா ய்ச்சி செய்தல் நிட்டைபுரிதல் முதலியன கொள்ளக்கூடுமே யன்றி அவனுக்குரிய சிறப்புரிமையாகிய ஆலயத்துள் அர்த்தமண்டபப் பிரவேசஞ் செய்தல் இபலாதது போலவாம். இன்னும் சேவகஸ்தானத்திலிருக்கிற ஒருவனுக்கு எஜமான் ஸ்தானத்திலிருப்பவனுக்குரிய புத்தியிருக்கலாம். இருப்பினும் எஜமான் சேவகனுகான். சேவகன் எஜமானுகான். அம்மட்டோ. பிறரும் எஜமானை எஜமானுகவும் சேவகனைச் சேவகனுகவும் மதிப்பார். மதியாராயின் தாம் துன்புறுவர். இவ்வாறே தாழ்ந்த ஜாதியாரிடத்தே உயர்ந்த ஜாதியாருக்குரிய அறிவிருத்தல் கொண்டும் உயர்ந்த ஜதியாரிடத்தில் தாழ்ந்த ஜாதியாருக்குரிய அறிவிருத்தல் கொண்டும் பிறப்பிற்குரிய சிறப்புரிமைகள் இல்லாது போய்விடு மென்பதை அறிவுடையோர் ஏற்றுக்கொள்ளா ரென்றும் இனியேனு மறிவாராக.

பிறப்பினுல் உயர்ந்தவராயிருந்தால் பிராமணனுடனிருந்து உண்கின்றது தானே" என்கின்ருர். நன்று நன்று; ஜாதி வித்தியாசம் வேண்டாமென்று சொல்வது யாருக்கு? பிராமணனுக்குச் சொல்கின்ருரா? அங்ஙனமாயினன்ருே இவர் அக்கேள்வி கேட்கத் தக்கவராவர்! பிராமணர் முதல்பறையர் ஈருக ஒவ்வொரு வருணத்தவரும் ஒவ்வொரு உயர்தரப் பேரால் தங்களை உயர்த்திக்கொண்டு வருகின்ருர்களென்று இவரே கூறுகின்ருர். அவ்வாருயின் ஜாதி வித்தியாசம் வேண்டா மென்று சொல்ல முற்படுவோர் ஒரு ஜாதியராய் இருக்கமாட்டாரென்று இவருடைய கூற்றினுலே விளங்குகின்றதல்லவா? இவ்வாறு தமக்கென ஒரு ஜாதியில்லாதவராகிய குலமிலிகளை வேளாளர்கள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது தான் இவரது உண்மைச் சைவத்தின் கொள்கை போலும்.

தேவாரத்தை எடுத்துக் காட்டியும், திருநாளைப்போவார் நாயனுரை உவமையாகக் கூறியும் அதனையடுத்து இவர் எழுதியிருக்கும் வாக்கியங்கள் எல்லாம் முன்னேடுபின் முரணுறக் கூறியிருக்கின்ருர் என்பதை ஈண்டு விரிப்பிற் பெருகுமென்றஞ்சி விடுக்கின்ருேம்.

"வருவாயின் பொருட்டு கருமதீக்கை பண்ணுதலையே தொழிலாகக் கொண்டுள்ளார்." என்று வாயஞ்சாது கூறுகின்ருர். சரியை, யோகங்கள் முற்றிய பின்னர் ஞானம் வருமென்று இவர் அறிந்திருப்பாராயின் இவ்வாறு கூறுவரா? ஆசிரியனுக்குப் பாத

காணிக்கை செலுத்தவேண்டுமென்பதைப் படித்திருப்பினுங் கேட்டிருப்பினும் இவ்வாறு வெற்றுரை செய்வரா? போலீஸ் சேவகன் முதலிய உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் வயிற்றுப் பிழைப்புக்காகக் கூலிவேலை பார்ப்பவர்களென்று ஒரு வர்த்தகனாவது விபசாரிபாவது சொல்வானாயின் அவன் கதி என்னவாகும்? அவனைத் தண்டிப்பதற்கு அரசன் பிரத்தியக்ஷமா யிருப்பதுபோல் குருநிந்தனை செய்பவரைத் தண்டிப்பதற்கும் பிரத்தியக்ஷமாய் ஒருவருமில்லையென்று துணிவுகொண்டு சொல்கின்ற இவர்தானா உண்மைச் சைவர்? பிரத்தியக்ஷ தண்டனை காணப்படாவிடினும் காலாந்தரத்தில் இறைவனால் நரக தண்டனை விதிக்கப்படுதல் நிச்சயமென்பதை அறிந்து பிழைக்க வழிதேடி யுய்வாராக.''

தேவார முதலிய திருமுறைகளை ஓதுபவரும் விபூதி உருத்திராக்கம் அணிபவரும் ஓதியும் அணிந்தும் பயனில்லை என்று ஒரு இடத்திலும், அவற்றை யுடையார் எவராயினுமாகுக அவர் சிவமேயென வணங்கவேண்டுமென்று பிறிதோரிடத்திலும் முன்னேடுபின் முரணுறக் கூறுகின்ற இவர்தானா உண்மைச் சைவர்?

''கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்'' என ஒரு இடத்திலும் ''குலம் பொல்லேன்'' என ஒரு இடத்திலும் ''வேத வேள்வியை நிந்தனை செய்துழல்'' என ஓரிடத்திலும் ''வேதமோதிலென் வேள்விகள் செய்யிலென்'' என ஓரிடத்திலும் முரண்போலக்கூறும் திருவாக்குக்களுக்கு குலமுடைமையும் வேதமோதுதலும் பெருமையுடையனவே; எனவும் அவற்றினும் பெருமையுடையது ஒழுக்கமுடைமை யெனவும் முரணின்றிப் பொருள்கொள்ள அறியாத இவர்தானா உண்மைச் சைவர்?

இனியேனும் இத்தகைய அபவாதங்களில் தலையிடாமல் இவர் சூட்டிக்கொண்ட பெயருக் கேற்ப உண்மைச் சைவர் ஒழுகும் மெய்ந்நெறியில் ஒழுகுவாராக.

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவின ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லிபக்காற் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயான் மீண்டு,

என்பவாகலின் தூஷணை மொழிகளைப் பொருட்படுத்தேமென்க, அதுமட்டுமன்று......''எம்மை யிகழ்ந்த வினைப் பயத்தா லும்மை யெரிவாய் நரகத்து வீழ்வர்கொல் என்று பரிவதூஉம்......எமது கடமையாகக் கொண்டுள்ளேம் என்பதும் உணர்க.

தில்லைவாணன்.

தமிழ்வளர்ச்சியும் சபைகளின்கிளர்ச்சியும்.

(44-வது பக்கத்தொடர்ச்சி.) 83

6. சிவாகமங்கள் சிதைந்து போகாது க்ஷேமித்து வைப்பார் யார்.

7. முக்காலத்திற் றமிழ்நிலமாக்களும் வியாபாரத்தில் அதி உன்னதமான ஸ்திதியிலிருந்திருப்பதை இக்காலத்தில் நிலை நாட்டுவார் யார்.

8. திரைகடலோடியுந் திரவிய மீட்டுதலைத் தெரிவிப்பார் யார்.

9. சத்திர முதலியன ஆங்காங்கமைத்து எவர்க்கும் அன்னதானம் செய்வார் யார்;

10. குருபூஜை மடாலயங்கள் கட்டி அடியார் மாட்டு அன்பு காட்டி மகேஸ்வரர்களை மகிழ்விப்பார் யார்.

11. கல்வியிற் பெரியார்க்கும் சிறியார்க்கும் அவ்வவர் தன்மைகண்டு பொருளுதவி புரிவார் யார்.

12. ஏழைகளுக்கு அன்னதானம் சொன்ன தானம் மளிப்பார் யார்.உங்களையன்றியுண்டோ?

இன்னும் உங்களாற் செய்யப்படும் பல விதத்தருமங்களை என்னால் எண்ணி முடியவில்லை.

அன்பர்களே!

யாம் மேற்கூறிய இருவகைச் சன்மார்க்க நிலைகளினின்றுய்ய ஏற்ற உபாயங்களைச் சோபான முறையாகப் போதிக்கவல்ல இச்சன்மார்க்க சபை மிக மேலானதொன்றும்.இச்சபையாற்றான் இகபர சௌக்கியம் கைவரக் கூடிய தென்பது யான் சொல்லாமலே அமையும். ஓர் நடுக்காட்டில் செந்தாமரை பூத்தாலென்னப் பொலிந்து விளங்குமிச்சபை மேன் மேலும் நன்கு நடை பெறுமாறு செய்யுங்கள். அவ்வாறு செய்வதற்கு ஒற்றுமை தான் மிக வேண்டற்பாலது. ஒற்றுமையின்றேல் ஒரு காரியமும் சாத்தியப்படுதல் சாலாது.

ஆகையால் சிவநேசச் செல்வர்களே! இதுகாறுங் கூறியவற்றால் மிக உன்னத நிலையிலிருந்த தமிழ் மொழி க்ஷீணகதியடைந்து பின் தற்காலத்தில் ஒருவித வளர்ச்சி கொண்டு வருகிற தென்றும், அவ்வாறு வளர்தற்கு இத்தகைய சபைகளே காரணமென்றும், நீதி வாயப் பெற்றுவரும் சன்மார்க்கத்துக்குக் கொல்லாமை என்னும் அறனே மேலான தென்றும், இவ்விருவகைச் சன்மார்க்கங்களையும் கைக்கொள்ளல் வேண்டுமென்றும், பின்னைய சன்மார்க்கமடத்திற்கு தீக்ஷை, சரியை. கிரியை, யோக முதலிய சாதனங்கள் வேண்டப்படுவன வென்றும், அச்சாதனங்கள் யாவும் வேதத்திற் குறிப்பாயும் சிவாகமங்களில் நன்கு விளக்கியும் கூறப்பட்டுள்ளன வென்றும், சிவாகமங்களே சித்தாந்த மென்றும், தமிழ் வேதங்களும் மெய்கண்ட சாத்திரங்களும் அவைகளின் கருத்தைத் தழுவி ஆன்றோர்களால் யாமெல்லா முய்யச் செய்யப்பெற்றனவென்றும், சிவாகம முள்ளிட்ட அந்நூல்கள் தற்காலத்தில் க்ஷேமித்து வைக்கப்பட்டாவிடில் யாவும் அழிந்து விடுமென்றும், அவ்வாறு அழிந்துவிடில் நமக்கு நூல் செய்து தருவாரொருவருமில்லை என்றும், அவ்வாறு அழிந்து போகாவண்ணம் விலைகொடுத்து வாங்கியாவது அல்லது அவை இருக்குமிடத்தில் எழுத்தாளர்களைக் கொண்டு எழுதுவித்தாவது ஒருங்கே சேகரித்து வைப்பது முதலியனவான பரம தருமங்களைக் கையாளவேண்டியதற்கு இத்தகைய சபைகள் அவசியமென்றும், இச் சபைகள் நீடித்து வளர்ந்தோங்குவதற்கு ஒற்றுமையே அவசியம் வேண்டற்பால தென்றும், அவ்வொற்றுமை யில்லாவிடில் ஒன்றும் நடைபெறா தென்றும், அவ்வொற்றுமையோடு நடத்தினால் இகத்திலுள்ள சௌகரியங்கள் கிட்டுவதோடு பரசௌகரியங்களையும் யாம் யாதொரு ஐயமுமின்றி அடையலா மென்றும் ஒருவாறு கூறினம்:

இங்ஙனம்

எஸ். பால்வண்ண முதலியார்.

பாஷையின் தோற்றம்.

(ரு௯-வது பக்கத்தொடர்ச்சி)

வேறுசிலர்:—பக்தி, சந்தோஷம், விசனம், ஆச்சரியம், பயம் முதலிய விகாரங்களால் மனங்கலங்கி தன்னறிவிழந்து ஆகா, அந்தோ, ஐயோ என்று தொடங்கிய சப்தங்களை யுச்சரிப்பது வழக்கமாய் இருக்கின்றதன்றோ? அவ்விதமே முற்காலத்து மனிதர்களும் அவரவர் ஒவ்வோர் வஸ்துவைத்தாம் கண்டவுடன் தம்மனத்திற்குத் தோற்றியவாறு சப்தங்களையும் மாற்றிக்கொண்டனர். அவைகளே இவ்வுலகத்தில் பல வஸ்துக்களுக்கும் பெயர்களாக வழங்கப்பட்டன. அது பற்றியே சிற்சில விகாரங்களுக்கு முகமலர்ச்சி, சொல்வளம் முதலிய அவையவப் பொருளற்ற அர்த்தங்கள் உண்டாயினவென்று கூறுவர். இது நிற்க. கண்ணிற் கலங்காரமான ஓர் பொருளைக் காணுங்கால் களிப்புண்டாவதையும், சிங்கம் முதலிய துஷ்டமிருகங்களைக் காணுங்கால் நடுக்கமுண்டாவதையும் இயற்கையிலறிகிறோம். இதற்குக் காரணம் பதார்த்தங்களின் குணங்களையும் தொழில்களையும்பற்றி அவ்விதத் தோற்றங்களுண்டாயிருக்க வேண்டுமென்பதுதான். இதனையே உத்கூஜித சித்தாந்தமென்பர்.

இவ்விருவகைச் சித்தாந்தங்களையும் விலக்கிப் பாஷைகளின் உண்மைகளை அறிந்தவரிற் சிறந்தவர் என்றும் மேதாவிகளுள் மூலகுருவென்றும் நாற்றிசையாரும் கொண்டாடும் தகைமைபெற்ற மோக்ஷ மூலர் என்பவர் இவ்விஷயத்தைப்பற்றி ஓர் சித்தாந்தம் முடித்திருக்கின்றார். அஃதாவது:—உலகத்தில் நாம் காணும் ஒவ்வொரு பொருள்களும் ஒன்றோடொன்று பொருந்துவதால் இயற்கையில் ஓர் ஓசை உண்டாகின்றது. அவ்வாறு மனிதர்களுடைய உள்ளம் ஒவ்வொரு பொருளையும் கவருங்கால் ஒவ்வொரு சப்தங்களைத் தோற்றுவிக்கின்றன. அந்த ஒலிகளே பொருள்கள் தோறும் வேறுபடும். அவற்றுள் மனிதர்களுடைய மனத்திற்கு விலங்கினத்திலும் உயர்ந்த ஊக்கம், அறிவு முதலிய அபூர்வ சக்தி யிருத்தலால் அவ்வகையிற்றோன்றும் ஒவ்வொரு சப்தங்களும் பொருள்களோடியைந்து இனிமையுற்றனவாகி வெளிப்படுகின்றன. ஆத

லால் முற்காலத்தில் தோன்றிய மூல புருடர்களின் உள்ளத்திற் றோன்றிய ஒலிகளின் சேர்க்கையே ஆதியில் பாஷையென வழங்கப் பட்டதென்று கூறுகிறார். இன்னும்பல மதங்களுண்டு. அவற்றை விரிப்பிற் பெருகும். இவ்வாறு பாஷையின் தோற்றத்தைப் பற்றிய பல மதங்களை யெடுத்துக் காட்டினேன்.

இவற்றுள் முதன்மையான ஒன்று துணிந்து கூறல் என் கடமை யாதலின் இனி அதனை ஆராய்வேன். பல காரணங்களைக் கொண்டு பல சொற்கள் பிறத்தல் சகஜமாதலின் மற்றைய சித்தாந் தங்களை மறுக்க நான் முன்வரவில்லை. பொதுவாக ஆராய்ந்துபார்த் தால் பெரும்பான்மையான சொற்கள் முதலில் கூறிய அனுகரண சித்தாந்தப்படியே தோற்றி யிருக்கவேண்டுமென எவரும் அறிவார் கள். ஆனால் சிலர் இச்சித்தாந்தத்தை குணந் தொழில் முதலிய வற்றை அனுசரித்து இச்சப்தங்களை எவ்வாறுபிறப்பிக்கக்கூடுமென மறுப்பர். ஆனதாலதனை இவ்வித முறையின் மறுப்பவரும் ஏற்றுக் கொள்ளாமலிரார். தொழில்களிலும் குணங்களிலும் கண்டவுடன் அதற்கு ஓர் அனுகரண சப்தம் அமையாவிடினும், பரம்பரையில் அதற்குமோர் சொல் உண்டாகக்கூடும். குறுகுறுத்தல் குடுகு டுத்தல் முதலிய சொற்கள் தொழிலை அநுசரித்து வெளிப்படுத் தும். இவ்விதம் திரவியங்களிலும் தொழில்களிலும் குணங்களி லும் சொற்கள் நிலைபெற்றனவாயிருந்ததை ஆராய்ந்து ஓர் விதமாக முடிக்கலாம். பர்வதங்களினுச்சியிற் பிறந்த குகைகளிற் புகுந்து, காடுகளிலுறைந்து உலகத்தாறுகளின் வெளிப்படும்அருவிகளைப் போல பாஷையும் உலகத்திற் கெடாத ஓர் நிலையில் நின்றுலகத்திற் குச் சுகத்தைக் கொடுப்பதன்று வெளியாகிறது.

சுபம்!

வி. டி. ஸ்ரீநிவாசய்யங்கார்.

* அரசவாழ்த்து.

மாட்சிமை தங்கிய ஐந்தாவது சார்ஜ் மன்னிறைமீ தியற்றப்பட்ட வாழ்த்துப்பா.

ஆசிரியப்பா.

திருமிகு முலகெலாஞ் செய்துகாத் தழிக்கும்
ஒருதனி முதல்வ னோங்கரு டன்னால்
மண்ணுல கடங்கலு மாட்சிபெற் றுயர்ந்த
வண்ணைந் தாம்ஜார்ஜ் மன்னிறை வாழ்க.
பகல்சா யாது பரவிய வாங்கில
விகலர சாட்சி யெழிற்ப குப்புகள்
ஐந்தினுந் தங்கொடி யார்த்தந் நிழலில்
மைந்தர்வாழ் வுறச்செய் வள்ளால் வாழ்க.
மாண்விக் டோரியா மன்னிறை வியின்வழித்
தோன்றிய செம்மைத் தோன்றல் வாழ்க.
தவவிந்தி யாவைத் தனித்தாண் டவர்முனம்
நவிலரிச் சந்திரன் நளன்முசு குந்தன்
புருகுத்சன் புரூரவன் கார்த்த வீரியன்
அறுவர் கோவிறை யவர்பின் வரலால்
எட்டுவா ரட்டே ழாமவ ரென்ற
மட்டிற் பெயர்க்கோ மைந்தநீ வாழ்க.
மக்கட் குதவு மாண்பாற் புகழுத்
தக்க வலெக்சாண் டரியாப் பெயர்புனை
கோமகள் பெற்ற கோமான் வாழ்க.

ஆங்கில ஆட்சிப் பயன்.

இந்நிலத் தயற்புல மன்னவ ரிடையில்
வந்தவன் துறுத்திய துன்பந் தொலைத்தும்
வேளிர் புரிந்த கோளின லொழித்தும்
கொள்ளைக் கும்பினர் சள்ளை குலைத்தும்
அடிமைகொண் டொறுக்கு மிடும்பை துடைத்தும்

---

* இது தூத்துக்குடிச் சிவாநுபூதிச் சித்தாந்தசங்கம் முதல் ௵ பூர்த்திக்கொண்டாட்ட விசேடச் சபையில் 5–5–13. மாலை 4–30 க்கு தமிழ்ப் பிரமசூத்திராசிரியராகிய மறைத்திருவன். சுவாமி. விருதை. சிவஞானயோகிகளியற்றி வாசித்தது.

தீப்பாய்ந் துயிரை மாய்த்தலை நீத்தும்
இனவீற் றென்னுந் தனிமயக் கெய்திச்
சில்லோர் வாழவும் பல்லோர் தாழவும்
செய்யு மோரங் கொய்தனை வருக்கும்
அவ்வவர் படிப்புச் செவ்வை யொழுக்கம்
திறமைக் கேற்ற வுரிமையும் பூவும்
முயற்சியும் பட்டமும் உயர்ச்சியு மளித்தும்
முட்டில் நடுநெறிச் சட்ட மிகைத்தும்
வேற்றுமை யின்றி மேற்கல்வி தந்தும்
உலகியல் பலவும் புலனுறு நூலும்
புதினத் தாளு முதவித் தெளித்தும்
நாட்டன் புணர்ச்சி யூட்டி வளர்த்தும்
விரைவி லெவணுங் குறுகவுஞ் செய்தி
உய்க்கவும் பெறவு மைப்புகை வண்டில்
கம்பிவல் லஞ்சல் பம்பச் சமைத்தும்
அமைதி யெங்கணு மமையச் செய்தும்
பற்பல நலங்கள் பொற்புறப் புரிந்த
பிரிட்ட னுரிமைப் பெம்மான் வாழ்க.
முந்தைச் சீர்த்தி யிந்திய நாட்டில்
தில்லி யெனப்படும் வெல்களிற் றாரில்
ஆயிரத் தத்தொள் ளாயிரப் பதினோ
ராண்டிற் கடைமதி பன்னிரண் டாநாள்
இந்தியர் நல்விருப் பினிது பலிக்க
இந்தியர்க் குரிய மன்னிறை யென்னல்
மைந்துற விந்தியர் பிரிட்டிஷ்க் குடிகள்
என்பதை யுலகோ ரெண்ணி மதிக்க
மறுவில் கற்பும் வண்மையும் பழுத்த
இறைவி மேரிக் கோமக ளோடு
மின்னறு திருக்கை மேவித் தனிக்கோல்
எந்தி முடிபுனை யேந்தால் வாழ்க.
ஒருகோட் சார்பி லொட்டா தலைகைப்
பொதுநெறி நின்றருள் புரவல வாழ்க.

‘‘முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படுமோ’’ லெனவும்
கரவில் ‘‘திருவுடை மன்னரைக் காணிற்
றிருமாலைக் கண்டே னென்னு’’ மெனவும்
‘‘வேந்தனு மோங்குக’’ வெனவுங் கூறும்
ஆன்ற நூல்பல வுடைய ராதலின்
இறையன் புடைய விந்தியர் தமக்கு
முறையின் வந்த முனைவநீ வாழ்க.
பொறையி லாழ்மாக் கடலே வாழ்க
கலங்கா நிலையின் மலையே வாழ்க
அடைந்தோர்ப் புரத்தலி லரணே வாழ்க
பகையிருள் போக்கலிற் பகலவ வாழ்க
நீடூழி யிவ்வுல காண்டுநீ வாழ்க.
இறைவி மேரி நின்மனை வாழ்க
வாழ்க நின்றகை வாழ்க நின்விறல்
வாழ்க தம்மவர் நோதும லயலார்
என்னு மோர மியையா நின்னகம்
வாழ்க நின்றன் வலனும் பொறையும்
வாழ்க நின்ற னறிவு மன்பும்
வாழ்க நின்புகழ் வாழ்க நின்னருள்
வாழ்க நீளர சாட்சிச் செங்கோல்
வாழ்க விளவர சானநின் மகவும்
வாழ்க நின்றன் மற்றை மகாரும்
வாழ்க துணைவியர் வாழ்க நின்கிளை
வாழ்க வொற்றுமை யென்னு நின்கொடி
வாழ்க நின்குடி யான விந்தியர்
வாழ்க தேவுள தெனுநின துள்ளம்
வாழ்க நினக்குரித் தான வாட்சிகள்
வாழ்க நின்னடு வாழ்க வாளவை
வாழ்க வாட்சித் தலைவ ரனைவரும்
வாழ்க நின்படை வாழ்க நின்கொடை
வாழ்க நின்னரண் வாழ்க வாழ்கவே.

இங்ஙனம்.
சுவாமி, விருதை. சிவஞானயோகி.
தமிழ்ப் பிரம சூத்திராசிரியர்.
5—5—13.

மந்திரம்.

மந்திர மென்பதன் பொருள் நினைப்பவனைக் காப்பதென்பது.

மந்=நினைப்பவனை, திர=காப்பது.

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப" தொல்காப்பியம்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"....... திருக்குறள்.

அந்நாட்களிற் கடவுளர் வந்து மனிதர்களுக்கு உபதேசம் செய்து போயினார்கள். சில சமயங்களில் நேரிலும் சில சமயங்களில் ருஷிகள் மூலமாயும் அறிவு ஊட்டுவித்தார்கள். மனிதர்கள் உபயோகத்திற்கு மந்திரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மந்திரமென்பது ஒருவார்த்தை அல்லது ஒருவாக்கியம்; அதனுடைய சப்தம் நமது கண்ணுக்குப் புலனாகாத லோகங்களில் அதிக வல்லமை பெற்றிருக்கிறது. அம்மந்திரத்தை உச்சரித்த மாத்திரத்திலேயே அருமையான காரியங்களெல்லாம் சாத்தியமாகின்றன. ஆழ்ந்தாலோசிப்பதற்கு அக்காலத்து மனிதர்க ளறிந்திருந்தார்கள். ஆகையினால் அவர்களெண்ணங்களோ எண்ணியவாறு நிறைவேற்றத்தகுந்த வன்மையுடையனவா யிருந்தன. மனிதன் கடவுளைப்பற்றித் தியானித்ததாகவும் அவர் அவனிடம் வந்ததாகவும் அனேக விடங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றதை நாம் கற்றுங் கேட்டுமிருக்கிறோம். ஒருவன் ஓர் அஸ்திரத்தைப் பற்றி நினைத்தான். நினைக்க அவ்வஸ்திரம் அவன் கைக்கு வந்தது என்று சொல்லப்பட்டிருப்பதை யாம் அறிந்திருக்கிறோம். எண்ணத்துக்கு அப்போதிருந்த சக்தி இப்போது மிருக்கிறது. மேற்புல விஞ்ஞானிகள் அதன் சக்தியைச் சிலநாளாகப் பரீக்ஷை செய்து கொண்டு வருகின்றார்கள். அக்காலத்தும் அம்மந்திரங்களைக் கொண்டு கடவுளை யழைக்கவாவது அல்லது ஓரஸ்திரத்தை அடையவாவது எல்லா மனிதராலு முடியவில்லை. தக்கஞானமுள்ளவர்கள் உபயோகித்தாற் பலனுண்டேயன்றி மற்றவர்களால் யாதொன்றும் முடியாதிருந்தது, இக்காலத்திலும் யோகிகளிற் சிலர் தாம் தம் எண்ணத்தை இவ்வாறு உபயோகிக்கக்கூடும். ஏனெனில், அப்போதிருந்த ர்கடவுளர்தாம் இப்போது மிருக்கிறார்கள். அவர் தாம்வேறொருவராய் மாறவுமில்லை. அவர் அன்று ஏற்படுத்தினவிதி

கள் மாறுபடவுமில்லை. மனம் மாறிப்போனவர்கள் மனிதர்களேய ன்றிக் கடவுளரல்லர். மனிதர்கள் சக்தியற்றவர்களாய்ப் போய்விட் டார்கள். அதற்குக்காரணம் அவர்களுக்குக் கடவுளிடத்து நம்பிக் கையும் பக்தியுமில்லாமையேயாம்.

மந்திரங்கள் ஏழுகோடி யென்னுந் தொகையுள்ளன. இவைக ளுக்கெல்லாம் *ஏழு பீஜாக்ஷரங்கள் ஆதியாயுள்ளன.(ஒருவருடைய நாமத்துக்கு முன்னே ஸ்ரீ என்பது முதலிய மகிமையைக்காட்டும் அக்ஷரங்களுளொன்றை எழுதினால் அவர்கள் எவ்வளவு பிரீதி அடைவார்களோ அத்தன்மைபோல) வேதாகமங்களிலே சொல்லப் பட்ட முறைப்படியே ஒவ்வொரு பீஜாக்ஷரங்களையும் தத்தம் நாமங் களோடு சேர்த்துக்கிரமப்படியே செபிக்க அவ்வத்தேவதைகள் அம் மந்திரங்களுக்கு வசப்பட்டவர்களாய்ச் செபிப்பவனுக்கு வேண்டிய இஷ்ட சித்திகளைக் கொடுக்கின்றார்கள். இவைகளைக்குறித்து (உமா மஹேஸ்வரசம்வாதமாக) சிதம்பர கல்பம் முதலிய கல்பங்களிலே சிவபெருமான் தமது அருட்சத்தியாருக்கு அநுக்கிரகித்திருக்கின் றார். இவைகளைக் கிரமமாக அறிந்து இவற்றின் பலனை ஒருங்கு பெற்றவர்கள் (48000) மகாருஷிகளும் பிறரும். திலீப் மகாராஜன் வசிஷ்ட முனிவரைப் பார்த்துச் சொன்னதாவது, சுவாமி தங்களு டைய மந்திரங்கள் கண்ணுக்கெட்டாத தூரத்திலிருக்கின்ற சத்து ருக்களையும் கெடுக்கின்றன. எங்களுடைய அஸ்திரங்களோ கண் பார்வைக்கு நேரே நிற்கின்ற சத்துருக்களைத் தப்பவும் விடுகின்றன. ஆதலால் மந்திரபலத்துக்குமற்றுமுள்ளவை ஈடல்ல. யானை முதலிய மிருகங்களும் சர்ப்பம் முதலிய விஷஜந்துக்களும் மந்திரத்தாற் கட் டுப்படுதல் பலருக்கும் தெரிந்தவிஷயம். ஆதலால் மந்திரபலத்தைக் குறித்துப் பேசவேண்டியதில்லை. வைதிக சைவர்கள் நியமமாகச் செபிக்கும் மந்திரங்கள் இரண்டு மொழிந்து மற்றுமுள பீஜ மந்தி ரங்கள் யாவும் பொருத்தம் பார்த்து ஸித்தம், ஸாத்தியம், ஸித்த ஸ்வஸித்தம், ஸித்தாரியோ என்றறிந்தே கைக்கொள்ளவேண்டும்.

---

* குருமுகூர்த்தமாய் தெரிந்துகொள்க.

† உபதேசித்துக் கொள்ளும் மந்திரத்தின் முதலக்ஷரத்தை மந்திரோப தேசஞ் செய்து கொள்பவனுடைய வழங்கும் பெயர் முதல்அக்ஷரம் ஆதியா கக் கொள்ளவேண்டும்.

ஏனெனில், பூர்வஜன்மத்திலே ஒருவன் ஒருமந்திரத்தை செபித்துக்கொண்டு அந்த மந்திர தேவதைகளுக்கு விருப்பமில்லாத அனேக கேடுகளை முரட்டுத்தனத்தால் செய்வித்து தான் முன்செய்ததை அறியாது இந்த சென்மத்திலே அந்தத் தேவதைக்குரிய மந்திரங்களைச் செபிப்பானாகில் அவனுக்கு அனேக கேடுகளைச் செய்து அவனை நிர்ப்பாக்கியனாக்கும். பூர்வ ஜன்மத்திலே அவப்பிரயோசன மொன்றையுங் கருதாது கிரமமாக அனுஷ்டித்த மந்திரத்தை இந்த ஜன்மத்திலே கைக்கொள்ளின் அது அனேக நன்மைகளைச் செய்து பாக்கியவானாக்கும். பூர்வஜன்மத்திலே செய்ததிதுவென்றும் இப்போது செய்யவேண்டியதும், தவிர வேண்டியதும் இவை யென்று (ஞானமின்மையால்) விளங்காதிருத்தலால் சாஸ்திரங்களிற் கூறியபடி மந்திரப் பொருத்தம் ஆவசியமாக வேண்டுமென்று கூறப்பட்டது. இதை யறியாத பலரும் தாம் ஒவ்வொன்றை உபதேசித்துக் கண்டபடியே பலராலும் எழுதிவைந்திருந்த மந்திரங்களைச் (சற்குருவினுற் பெற்றுக்கொள்ளாமற்) செபித்து நிஷ்பலமடைந்து மந்திரத்தாற் குற்றமடைந்த தென்பது தகாது. மந்திரங்களிலே கல்பக்கிரமம், சித்தாதிக்கிரமம் என இருவகையுண்டு. அவைசில விடங்களில் ஒன்றற்கொன்று மாருகவும் வரும். சித்தர்கள் தங்களுக்குப் பொருத்தம் குறைவான மந்திரங்களையும் தங்களுக்குப் பொருந்தும் அக்ஷரத்தை மந்திரார்த்த நியாயங்களை யறிந்து முன்பின்னுக மாற்றிச் செபித்துப் பலனடைந்திருப்பார்கள். அது மற்றவர்களுக்கும் அவ்விதமாதலரிது. கல்பமோ அவ்விதமன்றி ஒரே விதமாகவேயுள்ளது.

* 1. உபதேசித்துக் கொள்ளும் மந்திரத்தின் முதலக்ஷரம் சித்த வித்தத்திலிருந்தால் அந்த மந்திரத்தை எத்தனை தடவை செபித்தால் சித்தி வருமென்று கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறதோ அத்தனை தடவை செபிக்கவேண்டும்.

2. வித்த ஸாத்தியத்திலிருந்தால் இரண்டுபங்கு செபிக்கவேண்டும்.

3. வித்தஸ்வ வித்தத்திலிருந்தால் பாதி செபம் போதும்.

4. வித்தாரியிலிருந்தால் தன் வம்சத்தோர்களுக்கு நாசம்.

5. ஸாத்திய வித்தத்திலிருந்தால் அம்மந்திரம் இரண்டுபங்கு செபிக்கவேண்டும்.

6. ஸாத்திய ஸாத்தியத்திலிருந்தால் அம்மந்திரம் பயன்படாது.
7. ஸாத்திய ஸ்வஸித்தத்திலிருந்தால் சாஸ்திரத்திற் சொல்லியபடி செபிக்கவேண்டும்.
8. ஸாத்தியாரியி லிருந்தால் தன் பந்துக்களுக்கு நாசம்.
9. ஸ்வஸித்த ஸித்தத்தி லிருந்தால் பாதி செபம் போதும்.
10. ஸ்வஸித்த ஸாத்தியத்திலிருந்தால் விதிப்படி செபிக்கவேண்டும்.
11. ஸ்வஸித்த ஸ்வஸித்தத்திலிருந்தால் தாரணை செய்த மாத்திரத்தில் மந்திரம் ஸித்தியுள்ளதாகும்.
12. ஸ்வ ஸித்தாரியிலிருந்தால் தன் வேலைக்காரர்களுக்கு நாசம்.
13. அரி ஸித்தத்திலிருந்தால் புத்திரன் இறப்பான்.
14. அரி ஸாத்தியத்தி லிருந்தால் கன்னிகைகளுக்கு மரணமுண்டாகும்.
15. அரி ஸ்வ ஸித்தத்திலிருந்தால் குலத்திற்குக் கெடுதல்.
16. அரி சத்துருவிலிருந்தால் தனக்கு நாசமுண்டாகும்.

ஸித்தம் முதலிய கட்டங்களின் சக்கரம்.

ஊ,க,ழ,ஹ.	உ,ஈ,வ.	ஞு,வ,ஃ,ஊ.	ஊ,வ,ம.
ஓ,ஙு,வ.	ள,ஙு,ஐ.	ஔ.ஙு,ஶ.	ள௩,தே,ய.
꯷ஶ.வு,ந.	ஊ௩,ஜ,ஊ.	ஐ,ம,ய,க்ஷ.	ஊ,ஊ,வ.
ஊ,த,ஸ.	வெள,௦,ஐ.	ஊ௦,ண,ஷ.	வள,ட,꯷.

என்று காலப்ரகாசிகை 12-வது அத்தியாயம் கூறுகின்றது.

பறங்கிப்பேட்டை } சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி.

புத்தகக் குறிப்பு.

ஸ்ரீமதி அம்பரீஷோபாக்கியானம்:—இத்தலைப் பெயருடைய சிறிய புத்தகம் ஞானம்பாள் என்னும் திவ்ய சரித்திரம் எழுதிய கஜாம்பாள் எழுதிய அழகான வசனநூல். இதில் அம்பரீஷன் சிறந்த பக்தியாளனுகி பகவான் கருணைக்குப் பாத்திரனான விஷயம் நன்கு வெளிப்படுகின்றது. பகவான் பக்தரக்ஷகனென்பதும் இனிது விளங்குகின்றது. இதன் விலை ஒன்றரையணு. வேண்டுவோர் சென்னை திருவல்லிக்கேணி பாலசுப்பிரமணியன் கம்பெனியாரிடம் பெறலாம்.

பாரதன் என்னும் பெயருள்ள புத்தகமானது வான்மீகி ராமாயணத்திலிருந்து வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதியவர்கள் தமிழில் மொழி பெயர்த்தெழுதியது. பாரதனைப் பற்றிய விஷயங்களெல்லாம் ஆங்காங்கிருந்து எடுத்துத் திரட்டி வெளியிடப்பெற்று வசனநடையாக நன்கமைந்தது. விஷயப் பொலிவுள்ளது. படிக்க இனியது. இதன்விலை அணா 4 தான். இதையும் மேற்குறித்த பாலசுப்பிரமணியன் கம்பெனியாரிடம் பெறலாம்.

* * *

குலசேகரன் அல்லது பொற்கையான்மாறன்:—இப்பெரிய நாடகத் தமிழ் நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பாலபண்டிதப் பட்டம் பெற்றுக் கும்பகோணம் நேடிவ் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதராக இருக்கும் ஸ்ரீமத். சு. ஸ்ரீநிவாசய்யங்காரவர்களா லெழுதப்பட்டது. பொற்கைப் பாண்டியனைப் பற்றிய சரித்திரங்களைத் திரட்டி நன்றாக அமைத்துள்ளார்கள். படித்தற்கு இனிமை வாய்ந்துள்ளது. இதன்விலை அணா 3. ஆக்கியோரிடம் பெறலாம்.

* * *

சங்கீத ப்ரதம ஸிக்ஷாப்ரகரணம்:—இப்பெரிய சங்கீத நூல் சங்கீத மஹாவித்வான் பட்டணம் சுப்பிரமணியய்ய ரவர்களின் மாணுக்கரான ஸ்ரீமத் வி. எஸ். கிருஷ்ணசாமியய்யாரவர்களால் எழுதப்பெற்றது. இது பாலபோதம், பிரதமவிக்ஷை என இரண்டு வகுப்புள்ளது. சங்கீதப்பயிற்சி செய்பவர் யாவரும் மிகச் சுலபமாகக் கற்றுக்கொள்ள வழிகாட்டுவது. தற்காலத்துக்கு மிகவும் அவசியம் வேண்டிய சிறந்த நூல். நல்ல பளபளப்பான கடிதத்தில் வெகு அழகாக அச்சிடப்பெற்றுக் காலிகோ பயிண்டு செய்யப் பெற்றது. இதன்விலை ரூ 1—4—0 வேண்டுவோர் ஸ்ரீமத். வி. எஸ். கிருஷ்ணசாமியய்யரவர்கள், சங்கீத சாஹித்ய வித்துவான், திருவல்லிக்கேணி, சென்னை, என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

சமாசாரக்கொத்து.

விவாக விசேடம்:—மேலைச்சிவப்பட்டிச் சன்மார்க்கசபை அக்கிராசனாதிபதி ஸ்ரீமத் வ. பழ. சா. அண்ணாமலை செட்டியாரவர்கள் குமாரர் சாமிநாதசெட்டியாரவர்கட்கும், மகிபாலன்பட்டி ஸ்ரீமத் சி. சா. சின்னையாசெட்டியாரவர்கள் புத்திரி தெய்வயானைக்கும் இடபரவி ௳௰௯ மகிபாலன்பட்டியில் விவாகம் நடந்தது. விவாகச் சடங்குகளெல்லாம் சாஸ்திர விதிப்படி ஆதிசைவர்களே நடத்தினார்கள். மணமகன் கையினால் மணமகளுக்கு மாங்கல்யதாரணஞ் செய்ததும், அன்றிரவில் வதூவரர்கள் இரட்டைத்துரக ரதாரூடராக ஊர்வலம் வந்ததும் மிகப் பாராட்டற்பாலன. சங்கீத சாஹித்ய வித்வான்கள் பலர் வந்திருந்தனர். மிகவும்கோலாகலமாக விவாகம் நிறைவேறியது. வித்வான்கட்கெல்லாம் தக்கபடி சம்மானஞ் செய்தார்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் ஸ்ரீமத்

மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள் கூறிய

வாழ்த்துக் கவிகள்.

மெல்யாணல்லிசைவெறுப்பத் தன்செவிக்கின்னிசையின்பம்விளைத்தலாலே
நல்யாணர் மிருந்தானுந் தன்சுதனா கியசாமி நாதன் கேள்வி
புல்யாண ரமைசெவிக்கவ் விசையின்பங் கைம்மாறாப் புகுத்தவெண்ணிக்
கல்யாண மவற்காற்று மெங்களண்ணா மலைவள்ளல் கருத்து நன்றே. (௧)

நன்றமையண் ணாமலைமால் யோசிக்கி லுயிர்க்கின்ப நல்கு மென்று
தன்றனைய னாஞ்சாமி நாதனுக்குக் கல்வியெனத் தக்க மேலாய்
நின்றமனை வியைமணஞ்செய் வித்துடற்கின் பந்தன்னை நிகழ்த்தவேண்டி
மன்றல்கமழ் குழற்றெய்வ யானைமின்னை மணஞ்செய்வித்தான்வாழ்கவாழ்க.

மாதரசி யில்லறமல் லதுநலற மின்றென்னும் வாய்மை தேரிற்
காதல்செயுந் துணைநலமில் லாமையாற் போலுமெனக் கண்டு சாமி
நாதனுய ரில்லறத்தை நடத்துதற்குத் தக்கதுணை நலத்தைக் கொண்டான்
ஈதலமை தன்பிதா வென்னும்அண்ணா மலை மகிழ்ச்சி யெய்தத்தானே. (௩)

எவற்றினுமுந் துறுதலா லேமேலைச் சிவபுரியென் றிங்கு வைகும்
தவத்தினர்சூழ் மாநகரில் வணிகருக்குள் ளுயர்ந்தபெருஞ் சம்பத்தெய்திப்
பவத்துயர்தீர் தருசாமி நாதனும் புத்திரசம் பத்தும் பெற்றுச்
சிவத்தினுண்மை தெளியண்ணா மலைவள்ளல் சீர்த்தியினைச் செப்பார் யாரே.

அரிகேசநல்லூர் ஸ்ரீமத்முத்தய்ய பாகவதரவர்கள் கதைமுடிவில்

மு. ரா. கந்தசாமிக் கவிராயர் கூறிய செய்யுள்.

புலவர்புகழ் தருசாமி நாதவள்ளல் திருமணநாட் போது போந்த
பலகவிநூல் வல்லவரு மெல்லவருஞ் சொல்லவரும் படிக்குமேலாங்
குலமணியாமுத்தய்யன் வள்ளிமணக் காதையின்பங்கொள்ளச்சொற்றான்
மலர்தலைமாநிலத்தவர்தங்காதையின்பங்கொண்டதென்றார்வாய்மைநன்றே.

வதூவரர்கள் சகல ஐஸ்வர்ய சம்பன்னர்களாகப் பலவாண்டு வாழ்க.

பத்திராதிபர்.

கோநகர்

ஞானசம்பந்த நற்சபை கற்பகவிநாயக கலாசாலை
வாணீமந்திர புத்தகசாலை

இவற்றின் முதல்வருட பூர்த்திக் கொண்டாட்டம்.

இது நிகழும் வைகாசிமீ ௧௮வ ௧௯வ (31-5-13.) (1-6-13.) களில் இந்நகர் சீமான்களி லொருவரும் பொதுஜன வுபகாரமே பொருளெனக் கொண்டவரும் வாய்மையாளரும் அருங்கலை விநோதருமாகிய மகா-ா-ஸ்ரீ சு. முரு. ஷண்முகஞ்செட்டியாரவர்களுடைய விசித்திர விஸ்தாரமான பங்களாவில் மங்களகரமாக நடைபெற்றது. சபாமண்டபம் அழகாக அலங்கரிக்கப்பெற்றிருந்தது. பலவூர்களிலிருந்து வித்துவான்கள் பலரும் வந்திருந்தார்கள். ஆயிரத்துக் கதிகமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். இக்கூட்டத்தில் நாலிலொரு பாகம் பெண்பாலாயிருந்தது மெச்சத்தக்கதாம்.

சபைநிகழ்ச்சி விவரம்.

31-5-13. சனிக்கிழமை பகல் 3—30. மணிக்குக்கூடிய மஹாசபையில் புதுக்கோட்டைப் பிரபலவக்கீல்களிலொருவராகிய பிரஹ்மஸ்ரீ G. சுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள் B. A. B. L. அக்கிராசனம் வகித்தார்கள். இச்சபையின் காரியதரிசியும் கற்பகவிநாயக கலாசாலைத் தலைமையுபாத்தியாயருமாகிய பண்டித ஸ்ரீ அ. கோபாலையரவர்கள் அக்கிராசனாதிபதியவர்களை வரவேற்று வந்தனோபசாரங் கூறியபின்னர் வலையபட்டி விநாயக வித்தியாசாலையுபாத்தியாயர் வித்துவான் ஸ்ரீ திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் கடவுள் வாழ்த்துக்கூறினார்கள். பிறகு அக்கிராசனாதிபதி யவர்கள் ஆரம்பப் பிரசங்கம் நடந்ததும் ஷை கோபாலையரவர்கள் வருடாந்த அறிக்கைப்பத்திரம் வாசித்தனர். இப்பத்திரத்திற் கண்ட சபை, கலாசாலை, புத்தகசாலைகளின் அபிவிருத்தி விஷயங்களைப்பற்றிச் சபையோர்க்காக ஆ. தெற்கூர் ஸ்ரீ மாங்கரு- முத்து.அழகப்பசெட்டியாரவர்கள் தமது நல் லபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். பிறகு புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் சாஸ்திர பண்டிதரும் பொதுநலப் பிரியருமாகிய பிரஹ்மஸ்ரீ G. சுந்தரேச அய்யரவர்கள் B. A. L. T. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் சரித்திரத்தை நன்கு பிரஸங்கித்தார்கள். இப்பிரஸங்கம் நிறைவேறியதும் கற்பகவிநாயக கலாசாலை மாணவர்களாகிய சுமார் 5, 6 வயசுச் சிறுவனும் சிறுமியும் "தம்பியும் பையனும்" என்னும் விஷயத்தைப் பற்றிச் சம்பாஷித்து ஜீவகாருண்யச் சிறப்பை அழகாக விளக்கிக் காட்டினர். பின்னர் வித்வான் திரு. இராமசுவாமி ஐயங்காரவர்கள் "நாகரீகம்" என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசியமர்ந்தவுடன் அக்கிராசனாதிபதி யவர்களால் கற்பக விநாயக கலாசாலை மாணவர்களுக்குப் பரிசளிக்கப்பெற்றது. இதன்பின் முக்கால் மணி நே

ரம் யாவரும் இளைப்பாறிச் சபைகூடின வுடன் திருவாவடுதுறை யாதீன சைவப்பிர சாரகராகிய தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்கள் "அறிவு" என்னும் விஷயத்தை யெடுத்து யாவருமதிக்கப் பேசி விஷயச் சுருக்கமுங் கூறி முடித்தனர். அப்பால் மகிபாலன்பட்டி இருமொழிப் புலவராகிய பண்டித ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் தாம் மொழிபெயர்த்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் "உபதேச மொழிவெண்பா", விற் சிலவற்றைக் கூறிப் பொருள்விரித்துச் சபையோரை மகிழ்வித்தனர் அநந்தரங் கூறப்பெற்ற அக்கிராசனாதிபதி யவர்களின் அழகிய சமயோசித முடிவுரை காரியதரிசியவர்களின் வந்தனோபசார வாழ்த்துக்களுடன் இராத்திரி 9 மணிக்குச் சபை நன்கு நிறைவேறியது.

1-6-13. ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரையிலும் மாலை 3—30. மணிமுதல் 6—30. மணிவரையிலும் 7—30. முதல் 10 வரையிலும் நடந்தேறிய சபைக்குக் குறிப்பிட்டபடி ஸ்ரீமாந் வயி. நாக. ராம. அ. இராமநாதன்செட்டியாரவர்கள் விஜயஞ் செய்யாமையால் வித்வ ஜனப்ரியரும் வள்ளலுமாகிய ஆ. தெற்கூர் ஸ்ரீமாந் கரு. முத்து அழகப்ப செட்டியாரவர்கள் சபையோர்வேண்டுகோளின்படி அக்கிராசனம் வகித்து முகவுரை கூறி ஜீவகாருண்யமென்னும் விஷயத்தை யெடுத்துக்கொண்டு இதனுட் புலான் மறுத்தலையும் அடக்கி நன்கு பிரஸங்கித்தனர். இதன் பின்னர் "கல்வியுஞ் செல்வமும்" என்னும் விஷயத்தைக் கற்பகவிநாயக கலாசாலை மாணவர்களாகிய அரு. சுப்பிரமணியனும் மு. இராமனும் சம்பாஷித்து மனிதர்க்கு இவ்விரண்டும் அவசியம் வேண்டுமென்பதனை விளக்கினர். அப்பால் மகிபாலன்பட்டி உபந்நியாச வியாச நூலாசிரியராகிய ஸ்ரீ மு. சின்னையச்செட்டியாரவர்கள் இன்பவாழ்க்கை யென்னும் விஷயத்தையும் புதுக்கோட்டைக் காலேஜ் மாணவர் Mr, நடேசய்யர் "போதனாமுறை" என்னும் விஷயத்தையும் க.வி. கலாசாலை மாணவசனாகிய காரைக்குடி ராம. திருநாவுக்கரசு "பொறுமை" யென்னும் விஷயத்தையுங் கேட்டோர் களிக்கப் பேசினார்கள். இவ்வளவிற் காலைப் பிரஸங்கங்கள் நிறைவேறின.

பிற்பகல் 3—30. மணிக்குச் சபைகூடினவுடன் திருக் கோகர்ணம் ஸ்ரீ க. சொ. பாலசுப்பிரமணியக் கவிராயரவர்கள் "மாணாக்கரியல்பு" என்னும் வியாசம் படித்ததும், கோனாபட்டு டாக்டர் S A. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள். B. A. 1st M. B. C. M. பக்தி யென்னும் விஷயத்தையும் மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தலைவரும் மதுரைக் காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ண ஐயரவர்கள் "தமிழின் பெருமை" என்பதையும் கண்டனூர். ஸ்ரீ தெ. அரு. சித. இராமநாதன்செட்டியாரவர்கள் "சேள்வி முயல்" என்பதனையும் யாவரும் வியக்க வுபந்நிய

த்தார்கள். இவையானவுடன் கற்பகவிநாயக கலாசாலை மாணவர்களாகிய சு. இராமையனும் முரு. பழநியப்பனும் "ஊழும் முயற்சியும்" என்னும் அரியவிஷயத்தை யாவரும் எளிதிலறிந்து வியக்கும்படி சம்பாஷித்து முயற்சியே வலியதென்பதனை விளக்கினர். பின்னர் ஒருமணிநேரம் யாவரும் இளைப்பாறிச் சபைதொடங்கியதும் வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் "மூர்த்திதலந் தீர்த்தம்,, என்னும் விஷயத்தைப்பற்றி யொரு மஹோபந்நியாசஞ் செய்தனர். இதன் பின்னர் சொக்கலிங்கம்புதூர் சாரநாத ஐயங்காரவர்களும் பசுமலை ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ ந. ரா சுப்பிரமணியசர்மா அவர்களும் பள்ளத்தூர்த் தமிழ்ப் பண்டிதர்ஸ்ரீ P. சிதம்பர புன்னைவனநாத முதலியாரவர்களும் ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்களும் முறையே அடைந்தாரைப் புரத்தல், புலாலுண்ணும் பூண்டுகள், வாய்மை, கடவுள் வழிபாடு என்பவற்றைப் பற்றிச் சுருக்கமாகவும் அழகாகவும் பிரஸங்கித்தார்கள். இக்கொண்டாட்டத்திற்கு வர இயலாமைக்கு வியசனித்தும் சபையின் அபிவிருத்தியைக் கோரியும் அனுப்பிய அபிமானிகளின்கடிதங்களும் தந்திகளும் படிக்கப்பெற்றன. இவ்வூரிலிருந்து வியாபாரத்திற்காகச சௌங்கோம், போயிருக்கிற ஸ்ரீ கி. நா. இலக்குமணன் செட்டியாரவர்கள் ஸபையோர்க்கு அன்புடன் வரைந்தனுப்பிய விஞ்ஞாபனமும் படிக்கப்பெற்றது. அக்கிராசனாதிபதியவர்கள் அப்பொழுதைக் கப்பொழுது உபந்நியாஸ விஷயங்களின் ஸாராம்சங்களை விரிக்கவேண்டிய விடத்தில் விரித்தும், சுருக்கவேண்டிய விடத்திற் சுருக்கியும் பேசி முடிவுரையுங் கூறினர். அனந்தரம் பண்டிதஸ்ரீ அ. கோபாலையரவர்களும், இவ்வூர் ஸ்ரீ அரு. ராமசுப்பிரமணியன் செட்டியாரவர்களும், அக்கிராஸனர், உபந்நியாஸகர்கள், விஜயஞ்செய்தோர், இப்பெருஞ் சபைகூடுவதற்குக் கட்டிடம் உதவிய பெருந்தகையாளர், இச்சபைக்காரியங்களை நிர்வகித்தோர், இடையிடையே தேவாராதி அருட்பாக்கள்பாடி இசையமுதூட்டியதிருநெல்வேலி ஸ்ரீ சங்கரசுப்பிரமணிய பாகவதரவர்கள் வித்வான் ஸ்ரீ திரு. இராமஸ்வாமி ஐயங்கார் அவர்கள் முதலிய உபகாரிகள் அனைவோருக்கும் வந்தனோபசாரங் கூறினர். பின்பு பல வித்துவான்களும் வாழ்த்துப்பாக்கள் கூறினர். ஹாரசந்தனதாம்பூலாதிகள் வழங்கப்பெற்றன. வந்தோர் அனைவருக்கும் விருந்து முதலிய உபசாரங்கள் நன்கு நிகழ்ந்தன. இவ்வாறு முதல்வருஷோத்ஸவம் மங்களகரமாக நிறைவேறியது. இவ்வுற்சவ காரியத்தில் இந்நகரத்தாரனைவரும் எடுத்துக்கொண்ட சிரத்தை மிகவும் பாராட்டற்பாலது. இவர்கட்கெல்லாம் ஈசன் கருணைபுரிவாராக. சுபம்.

சம்பந்தன்.

வித்துவான்கள் பாடிய வாழ்த்துப்பாக்கள்.

இராயபுரம் போஸ்ட்மாஸ்டர்

ஸ்ரீவீரபத்திரக் கவிராயரவர்கள் பாடியது.

கோநகர்வா ழும்வணிக கோத்திரரன் பாலியற்று
ஞானசம் பந்த நறுஞ்சபையில்—வானமுதம்
என்னப் புலவரொருங் கெய்திப் பொதுநன்மை
தன்னைப்ர சங்கித் தனர்.

வலயபட்டி விநாயக வித்தியாசாலைப் போதகாசிரியர்

வித்வான் ஸ்ரீ திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்கள் பாடியவை

கோச்சக்கலிப்பா.

எண்பா லொருவா வெழிற்கோ நகர்வதியும்
ஆண்பாலர் பெண்பால ரமிருபா லாரெவரும்
பூண்பா லுறுசீரும் பொற்பா லுறுகற்பும்
மாண்பா லுறீஇத் துருவன் வடமீனின் வாழியவே.

வெண்பா.

இன்றழகைப் பெற்ற தெழிற்கதியா லிவ்வவையென்
றொன்றிய மாந்த ருவப்பெய்தத்—துன்றுங்
கருமுத் தழகுமுதற் கண்ணமர்ந்து தந்தான்
தருமுத் தமநற் றமிழ்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தலைவரும்
மதுரைக்காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய

ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் பாடியவை.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

எத்தனையோ தொழில்சிரம மிருந்துழியு மவற்றையெலா மெண்ணு திங்குப்
புத்தமுதத் தினுமினிய நற்றமிழின் வேட்கைமிகப் பொங்க லாலே
வித்தகமா ரழகப்ப வள்ளானீ பேரவையில் வீற்றி ருக்கு
மித்தினத்தை நற்றினமா வெண்ணிமகிழ் கின்றேனீ யென்றும் வாழி. (1)

பற்பலவண் ணமுமிந்தக் கோநகர்க்கு மெய்ப்புகழே பயப்ப வாய
நற்புலவர் திகழ்ஞான சம்பந்த நற்சபையு நாளு மோங்குங்
கற்பகவி நாயகக லாசாலை யுங்கற்றோர் கருது மேலாம்
பொற்புவளர் வாணீமந் திரநூற்சா லையுநாளும் பொலிக மாதோ. (2)

நருகப்ப னென்பவரை வருகப்ப னெனவேற்றுத் தாங்கி யின்பம்
பெருகப்ப ணனுகூலர் அறிவில்லார் கல்லாரும் பேதை நெஞ்சம்
உருகப்ப ணயவசனர் மாதேவன் மலர்ப்பதமே யோதுஞ் சீலர்
முருகப்ப னெனும்பெயர்பூண் புகழ்வணிக குலதிலகன் முதலோர் வாழி ()

பொய்யறுநற் புகழ்வளர்கோ நகர்வணிக ராதரவாற் பொலிவுற் றோங்குஞ்
செய்யதிருக் கற்பகவி நாயகக லாசாலை சிறக்க வந்த
துய்யகுணக் கோபாலன் முதற்குரவர் கலைபயிலுந் தொழில்பூண் செல்வர்
வையமெலாம் புகழ்கமழ நீடூழி நாமகிழ வாழி வாழி. (4)

பசுமலை ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

ஸ்ரீ நெ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள் பாடிய

வெண்பா.

கற்பகவி நாயகக லாசாலை கற்றுணர்ந்த
சற்சனர்கள் சார்ஞான சம்பந்த—நற்சபைவான்
றெய்வவா ணீமங் கிரமிவையங் கோநகர்க்குச்
செய்கமா நன்மை செழித்து.

திருக்கோகர்ணம் ஸ்ரீ க. செ.

பாலசுப்பிரமணியக்கவிராயரவர்கள் பாடிய

அறுசீர்க்கழி நெடில்டி யாசிரிய விருத்தம்.

வையமெலாஞ் செழித்தோங்க வளர்காழி யிடைத்தோன்று வள்ளலிந்தச்
சையநிகர் மாளிகைசூழ் தனிநகராங் கோநகர்நற் சபைக்கு மன்னாய்
உய்யவரப் பெற்றசனு னூறுதவிர்ந் தோங்குமிதற் குண்டோ வையம்
மையறுநன் மனத்தீரிம் மாண்சபைக்கே வந்து வந்து வாழ்கு வீரே.

பள்ளத்தூர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவர வித்தியாசாலைத்
தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ P.

சிதம்பரபுன்னைவனநாத முதலியாரவர்கள் பாடிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

பொற்பமர்கோ நகர்வணிக மணிகள்விடா முயற்சியினாற் பொலிந்து நாளுங்
கற்பகம்போ லுதவுநலா சாலையுநற் சாலையுஞ்சேர்க் காழிப் பிள்ளை
நற்பெயரால் வருஞான சம்பந்த நற்சபையு நலமிக்கோங்க
விற்பிறைநேர் புருவநுத லுமைபாகன் மலர்ப்பாதம் விழைந்து வாழ்வாம்.

சம்பந்தன்.